திண்டுக்கல் மாவட்டத்தில் கலெக்டர் பூங்கொடி தலைமையில் "வைகை இலக்கியத் திருவிழா" ஆலோசனை

திண்டுக்கல், டிச.7–

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், "வைகை இலக்கியத் திருவிழா 2024–2025" திண்டுக்கல்லில் நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

வைகை இலக்கியத் திருவிழா கடந்த இரண்டு ஆண்டுகளாக மதுரையில் நடத்தப்பட்டது. தற்போது திண்டுக்கல் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பொது நூலக இயக்ககம் ஆகியவை சார்பில் வைகை இலக்கியத் திருவிழா 2024 –2025 விரைவில் நடத்தப்படவுள்ளது. இதை முன்னிட்டு இளைஞர் இலக்கியத் திருவிழா கல்லூரிகளில் நடத்தப்படவுள்ளது. இதில் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி உள்ளிட்ட 10 வகையான போட்டிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. வெற்றியாளர்களுக்கு வைகை இலக்கியத்திருவிழாவில் பரிசுகள் வழங்கிடவும் சிறந்த ஓவியங்களை காட்சிப்படுத்திடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வைகை இலக்கியத் திருவிழாவில், கலை நிகழ்ச்சிகள், புத்தகக்கண்காட்சி, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் ஓவியக்கண்காட்சி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளின் புகைப்படக் கண்காட்சி, இலக்கிய சொற்பொழிவுகள், கலந்துரையாடல், கவிதை பொழிவு, புகழ்பெற்ற எழுத்தாளர்களின் கதை, கட்டுரை மற்றும் நூல் திறனாய்வு, பரிசு வழங்குதல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. விழாவிற்கு தேசிய மற்றும் மாநில அளவில் ஞானபீட விருது பெற்ற எழுத்தாளர்கள், சாகித்திய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர்கள், வைகை நதி பாயும் மாவட்டங்களைச் சேர்ந்த முக்கிய எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேச்சாளர்கள் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்க செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. விழாவை சிறப்பாக நடத்திட அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சே.ஹா.சேக் முகையதீன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) மு.கோட்டைக்குமார், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் இரா. சக்திவேல், மாவட்ட நூலக அலுவலர் இரா.சரவணக்குமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

திருவாரூரில் ஜெயலலிதா நினைவு தினம் அனுசரிப்பு

திருவாரூர், டிச.7–

திருவாரூர் மாவட்டத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் எட்டாம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

தமிழக முன்னாள் முதல்வர் மறைந்து டேய் ஜெயலலிதாவின் எட்டாம் ஆண்டு நினைவு தினம் திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் அவரது சிலைக்கு திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். திருவாரூர் புது தெருவில், அமைக்கப்பட்டுள்ள ஜெயலலிதா சிலைக்கு அதிமுகவினர், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் நகரச் செயலாளர் ஆர்.டி.மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் மணிகண்டன், செந்தில்வேல், மாவட்ட பொருளாளர் பன்னீர்செல்வம், மாவட்ட இளைஞர் இளம் பெண்கள் பாசறைச் செயலாளர் கலியபெருமாள்,வர்த்தக அணிச் செயலாளர் ரெயில் பாஸ்கர்,மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் சின்னராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதே போல் மன்னார்குடியில் அதிமுக அமைப்புச் செயலாளர் நகர மன்ற முன்னாள் தலைவர் சிவரஞ்சமாணிக்கம் தலைமையில் ஒன்றிய குழு தலைவர் டீ மனோகரன் மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் பொன் வாசுகிராம், செயலாளர் ஆர்.ஜி.குமார், மாவட்ட மகளிர் அணி செயலாளர் நகர மன்ற முன்னாள் தலைவர் சுதா அன்புச்செல்வன் மாவட்ட ஜெயலலிதா பேரவை பொருளாளர் ராதாகிருஷ்ணன் பொதுக்குழு உறுப்பினர் கலைவாணன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் பெரியார் சிலையிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு, விதி வளைவில் அமைக்கப்பட்டிருக்கும் எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர். இதேபோல் கூத்தாநல்லூர் நகர அதிமுக சார்பில் நகர செயலாளர் ராஜசேகரன் தலைமையில்

அதிமுக நகர அலுவலகத்தில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டு லெட்சுமாங்குடி பாலத்தருகேயுள்ள எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்தனர். நிகழ்ச்சியில், நகர முன்னாள் துணைச் செயலாளர் எம். உதயகுமார்,அதிமுக நிர்வாகி எஸ்.ப.காளிதாஸ்,நகர் மன்ற உறுப்பினர் முருகேசன், நகர மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கருணாநிதி, விக்ரம், நிர்வாகிகள் நெடுமாறன், வல்லரசன்,ரெகுபதி பாண்டியன்,தாஜுதீன், விஜி, ராஜேந்திரன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் பங்கேற்றனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைச்சர் மெய்யநாதன் திறந்து வைத்தார்

புதுக்கோட்டை, டிச.7–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் திருநார் ஊராட்சி பகுதிகளில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :–

தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறங்களில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கிராமப்புறங்களுக்கு தேவையான குடிநீர் வசதி, சாலை வசதி, மின் வசதி, சுகாதார வசதி உள்ளிட்டவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், இன்றைய தினம் திருநார் ஊராட்சி பகுதிகளில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் திறந்து வைக்கப்பட்டது.

அதன்படி திருநார் ஊராட்சி, திருநார் தெற்கு பகுதிகளில், ஜல் ஜீவன் மிஷன் 2023 24 திட்டத்தின்கீழ், பேயன் குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுடன் ரூ.7.30 லட்சம் மதிப்பீட்டிலும் பேராட்சி குடியிருப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவுடன் ரூ.27.25 லட்சம் மதிப்பீட்டிலும் கருவன் குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுடன் ரூ.16.75 லட்சம் மதிப்பீட்டிலும் மொந்தையன் குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுடன் ரூ.7.30 லட்சம் மதிப்பீட்டிலும் புதிதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குடிநீர் தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இத்தகைய நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், அறந்தாங்கி வட்டாட்சியர் திருநாவுக்கரசு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது திமுக அரசு: அமைச்சர் பெரியசாமி பெருமிதம்

திண்டுக்கல், டிச.7

மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது திமுக அரசு என்று திண்டுக்கல்லில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 712 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.77 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி வழங்கி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு உலக மாற்றுத் திறனாளிகள் தின விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி திண்டுக்கல் ஓம்சாந்தி சிபிஎஸ்இ மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி தலைமை தாங்கினார். வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் இளமதிஜோதிபிரகாஷ், துணை மேயர் ராஜப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாற்றுத்திறனாளி நல அலுவலர் நா.சாமிநாதன் வரவேற்று பேசினார். விழாவின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 712 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.77லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கிவிட்டு மாற்றுத் திறனாளிகள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கலைஞர் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தினார். அவர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். மாற்றுத்திறனாளிகளின் நலனில் மிகவும் அக்கறை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தனது கட்டுபாட்டில் வைத்து மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து சலுகைகளை வழங்கி வருகிறார். சமூகத்தில் அடித்தட்டில் இருக்கின்ற மக்களுக்கும் நன்மை செய்திடும் வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடுஅரசுமாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மூன்று சக்கர சைக்கிள், மடக்கு சக்கர நாற்காலி, ஊன்று கோல்கள், முடநீக்கு சாதனம், செயற்கை கால் செயற்கை கை, நவீன செயற்கை கால் போன்ற உபகரணங்கள் வழங்கப்படுகிறது. பார்வையற்றோருக்கு பிரெய்லி கை கடிகாரம், கருப்பு கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்றுகோல் வழங்கப்படுகிறது, செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு காதுகேட்கும் கருவி வழங்கப்படுகிறது.

இரண்டு கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் சட்டமன்றத்தில், ஒரு கால் பாதிக்கப்பட்டு பணிக்கு செல்கின்ற மற்றும் சுயதொழில் செய்கின்ற மாற்றுத்திறனாளிகளுக்கும் பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்க நிபந்தனையை தளர்த்தி உத்தரவு வழங்கியுள்ளார்.

கடந்த ஆண்டு மட்டும் 136 மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டு திண்டுக்கல் மாவட்டத்திற்கு மட்டும் 500 மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்க உத்தரவு வழங்கியுள்ளார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.25,000 மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. பட்டப்படிப்பு முடித்து இருந்தால் திருமண நிதியுதவி ரூ.50,000 மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு வங்கி கடன் ரூ.25,000 மானியத்துடன் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மன வளர்ச்சி குன்றியோர் மற்றும் கடும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட பராமரிப்பு உதவித்தொகையை ரூ.1,500 லிருந்து ரூ.2,000ஆக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். இத்திட்டத்தில் மட்டும் திண்டுக்கல் மாவட்டத்தில் 7,811 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் கல்வி பயிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகையை இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கியுள்ளார். அதன்படி ரூ.1000 முதல் ரூ.7,000 வரை உதவித்தொகை பெற்று வந்த மாற்றுத்திறனாளி மாணவர்கள் தற்போது ரூ.2,000 முதல் ரூ.14,000 வரை கல்வி உதவித்தொகை பெற்று வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 2023–2024ஆம் நிதியாண்டில் மட்டும் பல்வேறு திட்டங்களில் கீழ் 8,869 பயனாளிகளுக்கு ரூ.20.68 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிக்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தில் 90 பயனாளிகளுக்கும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் 146 பயனாளிகளுக்கும் மூன்று சக்கர சைக்கிள் 60 பயனாளிகளுக்கும் மடக்கு சக்கர நாற்காலி 80 பயனாளிகளுக்கும், சிறப்பு சக்கர நாற்காலி 30 பயனாளிகளுக்கும் பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி 15 பயனாளிகளுக்கும் ஊன்றுகோல் வழங்கும் திட்டத்தில் 50 பயனாளிகளுக்கும் நவீன செயற்கை அவயம் 8 பயனாளிகளுக்கும் செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு காதொலிகருவி 180 பயனாளிகளுக்கும் பார்வையற்றவருக்கு கருப்பு கண்ணாடி 50 பயனாளிகளுக்கும், பார்வையற்றவருக்கான பிரெய்லி கைக்கடிகாரம் 50 பயனாளிகளுக்கும் என மொத்தம் 759 பயனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்குவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பயனாளிகள் தேர்வு செய்வதற்கு வட்ட வாரியாக சிறப்பு முகாம் நடத்தப்பட்டது.

மொத்தம் 11 இடங்களில் நடைபெற்ற முகாமில் 1200க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.

முகாமில் கலந்து கொண்டவர்களில் 712 மாற்றுத்திறனாளிகள் உதவி உபகரணங்கள் வழங்க தேர்வு செய்யப்பட்டனர். அதன்படி, மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம் 8, பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி 21, மூன்று சக்கர சைக்கிள் 30, மடக்கு சக்கர நாற்காலி 86, ஊன்று கோல்கள் 14, எல்போ கிரட்சஸ் 104, ஊன்றுகோல் (கைத்தடி) 53, ரோலேட்டர் (நடைப்பயிற்சி சாதனம்) 17, மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு சக்கர நாற்காலி 8, தொழுநோயால் பாதிக்கப்பட வர்களுக்கு சாதனம் 7, காதொலி கருவி 206, சுமார்ட் போன் 9, சிறப்பு குழந்தைகளுக்கான கல்வி கற்பிக்கும் சாதனம் 328, செயற்கை கால் 63, செயற்கை கை 12, முடநீக்கு சாதனம் 58 ஆகியவை வழங்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடைபெற்ற சிறப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 712 மாற்றுத்திறனாளிகளுக்கு ஸ்டீல் அத்தரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் மூலம் ரூ.77 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் இன்றைய விழாவில் வழங்கப்பட்டுள்ளது என்றதோடு

மாற்றுத்திறனாளிகள் நலனில் அதிக முக்கியத்துவம் அளிக்கும் முதலமைச்சராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செயல்பட்டு வருகிறார், என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஸ்டீல் அத்தரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் தலைமை நிர்வாக அலுவலர் கௌதம்தாஸ், அலிம்கோ நிர்வாகி சிவக்குமார், அமைச்சரின் உதவியாளர் ஹரி, திமுக நிர்வாகி அம்பை ரவி, திண்டுக்கல் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், அகரம் பேரூராட்சி மன்றத்தலைவர் நந்தகோபால் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

காரில் கஞ்சா கடத்திய இலங்கைத் தமிழர் உட்பட இருவர் கைது

திருவில்லிபுத்தூர், டிச.7–

திருவில்லிபுத்தூர் அருகே காரில் கஞ்சா கடத்திய இலங்கைத் தமிழர் உட்பட இருவரை கைது செய்த போலீஸார், 900 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

திருவில்லிபுத்தூர் பகுதியில் கஞ்சா கடத்தப்படுவதாக வந்த தகவலை அடுத்து, எஸ்.பி கண்ணன் உத்தரவின்படி டி.எஸ்.பி ராஜா மேற்பார்வையில் வன்னியம்பட்டி காவல் நிலைய எஸ்.ஐ சுந்தர்ராஜ் தலைமையிலான போலீஸார் வாகன சோதனையில் ஈடுபட்டனர். திருவில்லிபுத்தூர் சத்திரப்பட்டி சாலையில் வந்த காரை நிறுத்தி சோதனை செய்த போது, 900 கிராம் கஞ்சா கடத்தி வந்தது தெரியவந்தது. காரில் வந்த மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே மேட்டுப்பட்டியை சேர்ந்த முருகன் மகன் விஜயகுமார் (31), திருவில்லிபுத்தூர் அருகே மொட்டமலை இலங்கை அகதிகள் முகமை சேர்ந்த ராஜேந்திரன் மகன் மாரிஸ்டின்(25) ஆகிய இருவரை வன்னியம்பட்டி போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். அதேபோல் திருவில்லிபுத்தூர் ராமகிருஷ்ணாபுரம் விலக்கு அருகே கஞ்சா விற்றுக் கொண்டிருந்த கொத்தங்கு ளத்தைச் சேர்ந்த மகா வீரபாண்டி (29) என்பவரை கைது செய்த திருவில்லிபுத்தூர் நகர் போலீசார் அவரிடம் இருந்து 950 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT. LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எண்.9 எம்.பி.நகர், 1வது தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர் 641607, தமிழ்நாடு, தொலைபேசி எண்: 04212221144

கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47வது மாடி, என்.சி. கேல்கர் மார்க், ஆர்.ஜி. கட்கரி சௌக், தாதர் (மேற்கு) மும்பை 400028 ; தொலைபேசி எண்: 022 26544000

(பிற்சேர்க்கை IV A (விதி 8(6)ஐ பார்க்கவும்)

அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002ன் விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

ஈடுபெற்ற கடன் வழங்கிய டிபிஸ் பேங்க் இந்தியா லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான கீழ் கையொப்பமிட்டவர் 1.M/s ஆர்வி ரசி கிரஸ்னெட் லில் (கடன்தாரர்), 2.V இளங்குமரன் 3.V சரவணன் (உரிமையாளர்/ அடமானதாரர்/ உத்தரவாததாரர்கள்) ஆகியோரால் ஈடுபெற்ற கடன் வழங்கியபரிடம் அடமானம்/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அடையான சுவாதீனம் எடுத்துக் கொண்டார் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/உடன் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது அதன் பின், ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் (ஓம்காரா பிஎஸ் 07/2023-24 அறக்கட்டளையின் அறங்காவலராக செயல்படுகிறது) 30.11.2023 தேதியிட்ட ஒதுக்கீட்டு ஒப்பந்தத்தின்படி கடன்தாரர்/உடன் கடன்தாரர்/உத்தரவாததாரர் மற்றும் டிபிஸ் பேங்க் இந்தியா லிமிடெட்டின் அடிப்படைப் பாதுகாப்புடன் மேலே கூறப்பட்ட நிலுவையில் உள்ள கடன்கள் முழுவதையும் பெற்றுள்ளது. மேற்கூறிய கடன்தாரர்/உடன் கடன்தாரர்/உத்தரவாததாரர்களிடம் இருந்து ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட், 31.07.2019 அன்று வரையிலான ரூ.32,64,440.81 (ரூபாய் எண்பத்திரண்டு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து நாலறுநூற்று நாற்பது மற்றும் எண்பத்தொரு பைசா மட்டும்) மற்றும் வட்டி மற்றும் செலவுகளை வசூலிக்க கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் 10.01.2025 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை (ஏலங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம் 09.01.2025 மாலை 5:00 மணிக்குள்) 'எங்கே எப்படி உள்ளதோ அப்படியே', 'உள்ளது உள்ளபடி', 'எந்தவித மாற்றமும் இல்லாமல்' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

ஈடுபெற்ற சொத்துக்களை மீட்பதற்காக, கிடைக்கும் நேரத்தைப் பெறுத்த வரையில், SARFAESI சட்டம், 2002ன் பிரிவு 13(8)ன் படி விதிகளுக்கு இணங்க கடன்தாரர்/உடன் கடன்தாரர்/உத்தரவாததாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

அசையாச் சொத்துகள், ரிசர்வ் விலை மற்றும் டேவளரிடு தொகை டெபாசிட் மற்றும் தெரிந்த வரையிலான வில்லங்கம் (ஏதேனும் இருந்தால்) அது குறித்த விவரம் பின்வருமாறு

சொத்து குறித்த விவரம்	ரிசர்வ் விலை	EMD
எஸ்.எப்.எண். 172/2A, மனை எண். 7,8,13 & 14, கதவு எண். 1415/6, 1415/8, ரெத்தினம் நகர், செங்கம்பட்டி சாலை, விராலிமலை, இலுப்பூர், புதுக்கோட்டை மாவட்டம். விஸ்தீரணம் 8800 சதுர அடி.	ரூ. 79,00,000/-	ரூ. 7,90,000/-
மின்னணு ஏலத் தேதி	10.01.2025 அன்று காலை 11.00 மணி	
குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை	ரூ.50,000/-	
பார்வையிடும் தேதி	20.12.2024 அன்று பகல் 12:00 மணி முதல் மதியம் 1:00 மணி வரை	
பங்கேற்பதற்கான ஏலக் கடிதம்/கேஒய்சி ஆவணம்/EMD சான்றை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்:	09.01.2025 அன்று மாலை 5:00 மணி வரை	
சுவாதீன நிலை	சுவாதீனம்	
தெரிந்தவரை பொறுப்புகள்/வில்லங்கம்	தெரியவில்லை	

விதிமுறைகள் & நிபந்தனைகள்: 1. OARFLஇன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர் M/s. சிஎ இந்தியா பிரைவேட் லிமிடெட் குருகன் மூலம் ஏலம் 'ஆன்லைனில்' நடத்தப்படும். ஆன்லைன் வைத்திற்கான ஏலப் படிவம், அறிவிப்பு, ஆன்லைன் ஏல விற்பனைக்கான பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின்னணு ஏல டெண்டர் ஆவணம் https://www.bankeauctions.com (உதவிக்கான மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com உதவிக்கான தொலைபேசி எண். +91 7291981124/25/26). என்ற இணையதளத்தில் கிடைக்கிறது. 2. EMD தொகையை பெயர்ட் செய்து, உள்ளூர்வழி ஐடி மற்றும் கடவுச்சொல்லை உருவாக்குதல், தானாகப் பதிவேற்றுதல், ஏலநிதியைச் சமர்ப்பித்தல், மின்னணு ஏலச் செயல்முறை குறித்த பயிற்சி பேன்றவற்றில் உதவி தேவைப்படும் ஏலதாரர்கள், மின்னணு ஏல சேவை வழங்குனரைத் தொடர்பு கொள்ளலாம் 'M/s. சிஎ இந்தியா பிரைவேட் லிமிடெட்', உதவிக்கான தொலைபேசி எண்: +91 7291981124/25/26, உதவிக்கான மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com, திரு பவிக் பாண்டியா, மொபைல்: 8866682937 மின்னஞ்சல் முகவரி : maharashtra@c1india.com. 3. செறிவு தொடர்பான ஏதேனும் விளவலுக்கு அல்லது செறிவு அட்டவணை செறிவு குறித்து ஆய்வுக்கு, ஆர்வமுள்ள நபர் சம்பந்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்: **சுபோத் சோனாவலே (மொபைல்** 9821168121), **மின்னஞ்சல் முகவரி**: subodh.sonawale@omkaraarc.com அல்லது வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளலாம். 4. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்தவரை மற்றும் தகவலின் படி மேலே உள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ளதைத் தவிர, செறிவு மீது எந்தவித வில்லங்கமும் இல்லை.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு http://omkaraarc.com/auction.php**இல் வழங்கப்பட்ட இணைப்பைப் பார்க்கவும்.**

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002 விதி 8(6)ன் கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002 விதி 8(6) மற்றும் 9(1) மற்றும் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்பனையை நடத்துவது பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும். அவர்கள் விரும்பினால் மேலே குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகையை கட்டணம் மற்றும் செலவுகளுடன் செலுத்துவதன் மூலம் சொத்துக்களை மீட்டுக்கொள்ளவும். மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) / உடன் கடன்தாரர்(கள்) / அடமானதாரர்களுக்கு இந்த அறிவிப்பானது முப்பது (30) நாட்களுக்கான ஒரு வட்டாப அறிவிப்பாகும். பணம் செலுத்தத் தவறினால், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ஈடுபெற்ற கடன் வழங்கியவர் விரும்பினால் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8 (5)ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட எந்த முறையிலும் சொத்து விற்கப்படும்.

தேதி: 07.12.2024
இடம்: மும்பை

**ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ப